# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2019

**ஆண்டு: 5** **திகதி: 23/11/2019**

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி செல்வநாயகி சிவசுப்பிரமணியம்**

**திருமதி பிரியதர்சினி பாஸ்கரதேவன்**

**மாணவர் பெயர்:** ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |
| வினா 7 | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**உண்மை பேசுவோம்**

காலம் மாறினாலும் இன்னும் மனித வாழ்வுக்கு முக்கியமானது, உண்மை பேசுதல் ஆகும். உண்மை உயர்வானது, ஒருவரை சான்றோனாக்குவது. உண்மை, மகிழ்ச்சி, சிறப்பு, வெற்றி, நம்பிக்கை, அன்பு, ஆளுமை போன்ற சிறப்பான இயல்புகளைக் கொண்டது.

நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால் சிறு குழந்தையில் இருந்தே உண்மை பேசிப்பழக வேண்டும். மகாகவி பாரதியார் "பொய் சொல்லக் கூடாது பாப்பா" என்று எமக்காககப் பாடியுள்ளார். உண்மை பேசும் போது பல துன்பங்கள் ஏற்படலாம். அதனை நாம் உணர்ந்து போட்டி, பொறாமை, கர்வம் இன்றி உண்மை பேசி நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். என்றும் உண்மையே வெல்லும் என்பதையும் உணரவேண்டும். உண்மை பேசுவதன் பயனால் குடும்பம், உற்றார், உறவினர், நண்பர்கள், சமூகம், நாடு, உலகம் முழுவதிலும் உன்னத நிலையை அடையலாம்.

உண்மை பேசி உன்னத நிலையை அடைந்த மன்னன் அரிச்சந்திரன். இன்றும் உண்மை பேசுவதற்கு உதாரணமாக அரிச்சந்திரனை நினைவு கொள்கின்றோம்.

உண்மையே பேசி இன்றும் அழியாப்புகழ் கொண்டவர் மகாத்மா காந்தி, அவர் எழுதிய நூல் "சத்திய சோதனை" இதற்குச்சான்றாகும்.

"வாய்மை எனப்படுவது யாதெனில்
யாதொன்றும் தீமை இலாத சொலல்"

என்ற வள்ளுவன் கூற்றின்படி "உண்மை என்றால் மற்றவர்களுக்குச் சிறிதும் தீமை தராத சொற்களைக் கூறுதலேயாகும்".

நாமும் விளையாட்டுக்காவது பொய் பேசாது, உண்மை பேசி உயர்வோம்.

**வினாக்கள்:**

1. எக்காலத்திலும் மனித வாழ்வுக்கு முக்கியமானது எது?

______________________________________________

______________________________________________

(2 புள்ளிகள்)

2. உண்மை பேசுதல் எத்தகைய சிறப்பியல்புகளைக் கொண்டது? ஐந்து (5) சிறப்பியல்புகளைத் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(5 புள்ளிகள்)

3. எமக்காக "பொய் சொல்லக் கூடாது பாப்பா" என்ற பாடலைத் தந்தவர் யார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(2 புள்ளிகள்)

4. நேர்மையாக உண்மையே பேசுவதால் நாம் அடையக் கூடிய பயன்கள் எவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(4 புள்ளிகள்)

5. உண்மையை பேசி அழியாப்புகழ் பெற்ற இருவரின் பெயர்களைத் தருக?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

(4 புள்ளிகள்)

6. வள்ளுவர் கூறிய குறளில் நமக்கு என்ன அறிவுரையைத் தருகிறார்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

(3 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**2.1 பொருத்தமான சொற்களின் கீழ் கோடிடுக.**

1. குழந்தைகள் நிலாக்காட்சியைக் கண்டு (கழித்தனர், களித்தனர்)
2. பெரிய மரத்தின் கிளைகளில் உள்ள (இலைகள், இளைகள்) குளிர் நிழலைப் பரப்பின.
3. (மலை, மழை) பெய்யும் காலத்தில் ஆற்றில் வெள்ளம் பெருகி ஓடும்.
4. மெழுகுவர்த்தியின் (ஒலியால், ஒளியால்) இருள் விலகியது.
5. பெரியவர்களின் (மணத்தை, மனத்தை) புண்படுத்தாமல் பேசுதல் வேண்டும்.

(5 புள்ளிகள்)

**2.2 பின்வரும் சொற்களுக்கு எதிர்கருத்துள்ள சொற்களை எழுதுக.**

1. மண்ணுலகம் ____________________
2. தர்மம் ____________________
3. தோற்றம் ____________________
4. இரவு ____________________
5. நம்பிக்கை ____________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**3.1 பின்வரும் பழமொழிகளைக் கீழே தரப்பட்டுள்ள சொற்தொகுதியால் பூர்த்தி செய்க.**

1. ஒரு பானை சோற்றிற்கு ______________________________
2. இக்கரை மாட்டிற்கு ______________________________
3. அடிமேல் அடி அடித்தால் ______________________________
4. ஐந்தில் வளையாதது ______________________________
5. உண்ணாச் சொத்து ______________________________

(அக்கரை பச்சை, ஐம்பதில் வளையுமா?, அம்மியும் நகரும்,
ஒரு சோறு பதம், மண்ணாய்ப் போகும்)

(5 புள்ளிகள்)

**3.2 பின்வருவனவற்றின் இளமைப் பெயர்களைத் தருக.**

1. மீன் ______________________________
2. வாழை ______________________________
3. ஆடு ______________________________
4. கோழி ______________________________
5. பன்றி ______________________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களை இருவேறு பொருள் விளங்க வசனம் அமைக்குக.**

1. கலை:
2. நகை:
3. கரை:
4. மதி:
5. படி:

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**5.1. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1. Bushfire ________________________________

2. Floods ________________________________

3. Draughts ________________________________

4. Firefighters ________________________________

5. Multi-Culturalism ________________________________

(5 புள்ளிகள்)

**5.2 பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.**

1. பல் + பொடி ________________________________

2. வெள்ளை + மேகம் ________________________________

3. இரண்டு + நூறு ________________________________

4. சிவப்பு + வானம் ________________________________

5. கருமை + கல் ________________________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

நீங்கள் படிக்கும் தமிழ்ப்பாடசாலையைப்பற்றி வெளிநாட்டில் உள்ள நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுக.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்**

பின்வருவனற்றுள் ஒன்றைத் தெரிந்து 15 வசனங்கள் எழுதுக.

1. தமிழர்கள் கொண்டாடும் ஒரு பண்டிகை
2. உமது சமூகத்திற்கு உம்மால் செய்யக்கூடிய நன்மைகள் / தொண்டுகள்
3. தமிழ்ப் பாடசாலையில் அண்மையில் கொண்டாடப்பட்ட வாணிவிழா